நிதிநிலைக்கேற்பப் பரிசீலிக்கப்படும். பதிவுத் துறை அலுவலகத்திற்கு அருகில் அரசுக்குச் சொந்தமான இடமாக இருந்தாலும் அல்லது தானமாக இடம் கொடுக்கப்பட்டாலும், இதனைப் பரிசீலிப்பதற்கு ஏதுவாக இருக்கும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா எண் 35, மாண்புமிகு உறுப்பினர் திரு. பெ.சு. விஜயகுமார், மாண்புமிகு ஊரகத் தொழில் துறை அமைச்சர் அவர்கள்.

35—

தொழிற்பேட்டை

***2169—திரு. பெ.சு. விஜயகுமார்:**

மாண்புமிகு ஊரகத் தொழில் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) போளூர் தொகுதியில் படித்தவர்களுக்கு வேலைவாய்ப்பு அளிக்க, தொழிற்பேட்டை அமைக்க அரசு நடவடிக்கை எடுக்குமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

மாண்புமிகு திரு. பொங்கலூர் நா. பழனிசாமி, ஊரகத் தொழில் துறை அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) மற்றும் (ஆ) திருவண்ணாமலை மாவட்டம், போளூர் தொகுதியில் தற்போது புதிதாய்த் தொழிற்பேட்டை அமைக்கும் திட்டம் ஏதும் சிட்கோவின் பரிசீலனையில் இல்லை.

முற்பகல் 9-45

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. பெ.சு. விஜயகுமார், இருக்கையில் இல்லை. மாண்புமிகு உறுப்பினர் திரு. அக்ரி எஸ்.எஸ். கிருஷ்ணமூர்த்தி.

திரு. அக்ரி எஸ்.எஸ். கிருஷ்ணமூர்த்தி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, திருவண்ணாமலை மாவட்டம், செய்யாறு தொகுதியில், கடந்த புரட்சித் தலைவி அம்மா அவர்கள் ஆட்சிக் காலத்திலே, சிப்காட் தொழிற்சாலை அமைப்பதற்குத் தேவையான ஆணைகள் வழங்கப்பட்டன. அந்தத் தொழிற்சாலையை உடனடியாகத்

TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY
TRUTH ALONE TRIUMPHS

2007 ஏப்ரல் 10]

தொடங்குவதற்கு இந்த அரசு முன்வருமா என்பதைத் தங்கள்மூலமாக அறிய விரும்புகிறேன். அதேபோல், கலசப்பாக்கம் தொகுதி விவசாயம் நிறைந்த பகுதியாக இருக்கின்ற காரணத்தினால், அந்தப் பகுதியிலே அரசு சார்பில் வேலைவாய்ப்பு அளிக்கின்ற வகையிலே தொழிற்பேட்டை அமைக்க முன்வருமா என்பதையும் தங்கள்மூலமாக அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு ஊரகத் தொழில் துறை அமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு திரு. பொங்கலூர் நா. பழனிசாமி: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சிப்காட் தொழிற்பேட்டை என்னுடைய துறையில் இல்லை. மாண்புமிகு முதல்வர் அவர்களுடைய துறையில் இருக்கிறது. தொழில் செய்ய இடம் கிடைப்பது; தொழில் முனைவோர் எண்ணிக்கை ஆகியவைகளைக் கருத்தில் கொண்டு, மாவட்ட ஆட்சித் தலைவர்களுடன் கலந்தாலோசித்து, தேவையான இடங்களில் தொழிற்பேட்டைகளை அனுமதிக்க எதிர்காலத்திலே அரசு முயற்சிகளை எடுக்கும்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *வினா எண் 36, மாண்புமிகு உறுப்பினர் திரு. ஓ. சுப்பிரமணியம், மாண்புமிகு வருவாய் மற்றும் சிறைச்சாலைகள் துறை அமைச்சர்.*

36—

வீட்டுமனைப் பட்டா

***14581—திரு. ஓ. சுப்பிரமணியம்:**

மாண்புமிகு வருவாய் மற்றும் சிறைச்சாலைகள் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) பவானிசாகர் அணைக்கட்டில் பணியாற்றிய தொழிலாளர்களுக்கு வீட்டுமனைப் பட்டா வழங்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

மாண்புமிகு திரு. இ. பெரியசாமி, வருவாய் மற்றும் சிறைச்சாலைகள் துறை அமைச்சர்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,*

சட்டமன்றம் TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY வாய்மையே வெல்லும் TRUTH ALONE TRIUMPHS